பராமரிப்புக்குரிய ஆணையை, முடிவு செய்யும் செயல் நோக்கத்திற்காக ஒவ்வொரு துணைக் கோட்டத்திலும் ஒரு தீர்ப்பாயத்தை அமைத்தது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–6) துறையின் 31–12–2009 ஆம் நாளிட்ட 171 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் காக்கும் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 56/2007) 32(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

93. 2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் காக்கும் சட்டத்தின்கீழ் தீர்ப்பாயம் பிறப்பித்துள்ள ஆணையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டினை விசாரிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஒன்றினை நியமித்தது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–6) துறையின் 31–12–2009 ஆம் நாளிட்ட 172 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் காக்கும் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 56/2007) 32(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

94. 2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் காக்கும் சட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட சமூக நல அலுவலரைப் பராமரிப்பு அலுவலராக நியமித்தது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந–6) துறையின் 31–12–2009 ஆம் நாளிட்ட 173 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் காக்கும் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 56/2007) 32(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

232. 2008–2009 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தணிக்கை அறிக்கை – ஆண்டுக் கணக்குகள். (தமிழ், ஆங்கிலம்)

233. மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)

[2010 மே 13

234. மானியக் கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)

235. சுற்றுச்சூழல் துறை பற்றிய செயலாக்க வரவு–செலவுத் திட்டம், 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)

236. வனத் துறை பற்றிய செயலாக்க வரவு–செலவுத் திட்டம், 2010–2011. (தமிழ், ஆங்கிலம்)

237. இந்து சமய அறநிலையத் துறையின் "திருப்பணிகள் மற்றும் நலப் பணிகள்–நான்கு ஆண்டு சாதனைகள்" என்கிற நூல். (தமிழ்)

238. மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் நான்கு ஆண்டு சாதனைகள் என்கிற சிறு நூல். (தமிழ்)

239. முன்னேற்றப் பாதையில் சமூக நலம்–நான்கு ஆண்டு சாதனைகள் (2006–2007 முதல் 2009–2010) என்கிற நூல். (தமிழ்)

240. "பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு, நலச் சட்டம் மற்றும் விதிகள்–ஒரு கண்ணோட்டம்" என்கிற சிறு நூல். (தமிழ்)

241. "குடும்ப வன்முறையிலிருந்து பெண்கள் விடுபட குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் 2005–ஒரு பார்வை" என்கிற சிறு நூல். (தமிழ்)

242. "குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006 மற்றும் விதிகள் குறித்த கையேடு" என்கிற சிறு நூல். (தமிழ்)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS